Australian Government

Department of Immigration and Citizenship



# வயதுவந்த குடிபெயர்வாளருக்கான ஆங்கில மொழித் திட்டத்தில் குழந்தைப் பராமரிப்பு

வயதுவந்த குடிபெயர்வாளருக்கான ஆங்கில மொழித் திட்டம் (AMEP) பாடசாலை செல்லும் வயதுக்குக் கீழுள்ள குழந்தைகள் உள்ள மற்றும் AMEP வகுப்புகளில் கலந்துகொள்வதற்கு குழந்தைப் பராமரிப்பு தேவைப்படுகின்ற வாடிக்கையாளர்களுக்கான குழந்தைப் பராமரிப்பை வழங்குகிறது.

குழந்தைப் பராமரிப்பானது AMEP வாடிக்கையாளர்களுக்கு எதுவித செலவும் இல்லாமல் வழங்கப்படுகிறன. மேலும் இது AMEP வாடிக்கையாளரின் வீட்டிலிருந்து 30 நிமிடங்களுக்குள் அல்லது AMEP வகுப்பிலிருந்து 30 நிமிடங்களுக்குள் செல்லக்கூடிய ஒரு சாத்தியமான இடத்தில் அமைந்துள்ளது. குழந்தைப் பராமரிப்பு வசதி மற்றும் போக்குவரத்தின் கிடைக்கும்தன்மை ஆகியவற்றைச் சார்ந்து பயண நேரங்கள் 30 நிமிடங்களைவிட அதிகமாக இருக்கக்கூடும்.

உங்கள் AMEP சேவை வழங்குநர் உங்கள் வீட்டிலிருந்து அல்லது AMEP வகுப்பிலிருந்து 30 நிமிடங்களுக்குள் அமைந்துள்ள குழந்தைப் பராமரிப்பை ஏற்பாடு செய்ய முயற்சி எடுப்பார். ஆனால் இது எப்போதுமே சாத்தியமாக இல்லாமல் போகலாம்.

நீங்கள் ஒரு AMEP வகுப்பில் கலந்துகொள்ளும்போது மட்டுமே குழந்தைப் பராமரிப்பு வழங்கப்படுகிறது. உங்கள் AMEP வகுப்பு நேரங்களுக்குப் பிறகு உள்ள மற்ற செயற்பாடுகளை இது உள்ளடக்காது.

உங்கள் குழந்தைப் பராமரிப்புத் தேவைகளை மதிப்பீடு செய்யும்போது உங்கள் AMEP சேவை வழங்குநர் பலவிதமான விருப்பத்தேர்வுகளை உங்களுக்கு வழங்கக்கூடும். ஆகவே உங்கள் படிப்பை முடிந்தவரை விரைவில் நீங்கள் தொடங்கலாம். எடுத்துக்காட்டாக, பின்வருவனவற்றைச் செய்யுமாறு உங்களிடம் கேட்கப்படலாம்:

- அந்த இடத்திலேயே இருக்கின்ற குழந்தைப் பராமரிப்பு வசதியுடன் கூடிய சமூக மையத்தில் படிப்பதற்கு
- AMEP வகுப்புக்கு நீங்கள் விரும்பக்கூடியதை விட அதிக தூரம் பயணம் செய்வதற்கு
- ஒரு குழந்தைப் பராமரிப்பு இடம் கிடைக்கும் வரை வீட்டில் பாடம் கற்பிப்பவரிடம் அல்லது தொலைதூரக் கற்றல் ஊடாகப் படிப்பதற்கு

குழந்தை பராமரிப்பு இடங்கள் குறைவாக இருப்பதாலும், அதிகளவு தேவையுள்ளதாலும் அது உடனடியாகக் கிடைக்காமல் போகலாம். இருப்பினும், உங்கள் AMEP பயிற்சி திட்டத்தின் தொடக்கத்துடன் குழந்தைப் பராமரிப்பை ஒரே சமயத்தில் ஏற்பாடு செய்ய சேவை வழங்குநர்கள் வேண்டப்படுகிறார்கள்.

குழந்தைப் பராமரிப்பு ஏற்பாடானது உங்கள் தேவைகளைப் பூர்த்தி செய்யவில்லை என்று நீங்கள் கருதினால், இதை உங்கள் AMEP சேவை வழங்குநருடன் கலந்துரையாட வேண்டும். ஒரு புகாரைச் செய்வது எப்படி என்பது குறித்த கூடுதல் தகவல்களுக்கு, தயவுசெய்து உங்கள் AMEP மையத்தின் மாணவர் கையேட்டைப் படிக்கவும் அல்லது உங்கள் ஆசிரியருடன் அல்லது இன்னொரு பணியாளருடன் பேசவும்.

நீங்கள் AMEP வகுப்பில் கலந்துகொள்ளாதபோது அல்லது உங்கள் ஆங்கிலப் பயிற்சியை முடித்துவிட்ட பின்பு, உங்கள் குழந்தைப் பராமரிப்பு ஏற்பாடுகளை நீங்களே செய்யவேண்டும் என்பதை தயவுசெய்து குறித்துக் கொள்ளவும்.

குழந்தைப் பராமரிப்பு பற்றிய கூடுதல் தகவல்களுக்கு, தயவுசெய்து உங்கள் AMEP சேவை வழங்குநரைத் தொடர்பு கொள்ளவும்.

people our business